# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
# தெஹியோவிற்ற வலயம்
# இடர் முகாமைத்துவ கால செயலட்டை 2021
# பாட இணைச்செயற்பாடு - செயலட்டை 06
# தரம் - 04

ரூபி ஜெசிந்தா
(ஆசிரிய ஆலோசகர்)

01. இன்று நாம் கணித விளையாட்டொன்றில் ஈடுபடுவோம்.

தேவையானவை

கீழே தரப்பட்ட காசு தாள்களை சேகரித்துக் கொள்க.













( 20ரூபாய் தாள் , 50ரூபாய் தாள், 100ரூபாய் தாள், 500ரூபாய் தாள்)

- அன்பார்ந்த மாணவர்களே வீட்டில் உள்ள பெரியவர்களின் உதவிகளை பெற்று கொள்க. ( விளையாடும் போது )
- மேலே கொடுக்கப்பட்டுள்ள காசுத்தாள்களை நன்கு அவதானித்து கொள்க.

- கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளைத் தேடிக் கொள்க.

1. காசு தாள்களின் பிரதான நிறம் யாது?
2. இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி யாது?
3. எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி யாது?
4. அச்சிடப்பட்ட திகதி யாது?
5. மேலுள்ள நாணயத் தாள்களை வெளியிட்ட வங்கியின் பெயர் என்ன?

- இப்பொழுது மாணவர்களே ஒரு காசுத்தாளை கையில் எடுத்துக் கொள்ளுங்கள்.

- மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கான விடைகளை அந்த காசுத்தாளில் அவதானித்து நினைவில் கொள்க.

- பிறகு அந்த காசுத்தாளை விளையாட்டில் ஈடுபடும் ஏனைய நபருக்கு கொடுங்கள்.

- நீங்கள் அவதானித்தவற்றை கூறி அவை அக்காசுத்தாளில் உள்ளதா? என சரி, பிழை பார்க்க சொல்லுங்கள்.

- சரியாக விடைக்கூறும் வினாவிற்கு 20 புள்ளிகள் வழங்குங்கள்.

- இவ்வாறு 5 வினாக்களுக்கும் விடையளித்து 100 புள்ளிகளை பெற்று வெற்றி பெறுக.

- இவ்வாறு ஏனைய காசுத்தாள்களையும் வைத்து விளையாடுக.